ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2222 - 2021 අප්‍රේල් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.04.01

*2222 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 460 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


***கவனிக்க.***- (i) இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பலப்பிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

459- B82219 - 5,403(2021/04)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட) - 2021

மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III மற்றும் அதன் பயிலுநர் தரம் ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் மத்திய மாகாணத்தில் மற்றும் தீவின் ஏனைய மாகாணங்களில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பொது தகைமைகள் : -**

1.1 இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

1.2 சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

1.3 இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடைய மற்றும் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்கு அதிகமான நிரந்தர வதிவினைக் கொண்ட துணையினைக் கொண்ட விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர், இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் தகைமையுடையை விண்ணப்பதார்களின் புள்ளிகளின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் மத்திய மாகாண சபையினுள் 05 வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் ;

1.4 திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

1.5 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

1.6 ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார் ;

1.7 ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை, அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**2. கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் : -**

அனைத்து கல்வி மற்றும் தொழிற்றகைமைகளை (தொழில்நுட்ப) தகைமைகளை 2021.05.03 ஆந் திகதிக்கு பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

2.1 திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில் (தொழிநுட்ப) தகைமைகள் |
|---|---|---|---|
| 2.1.1. மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/ மின்னியல்/ கட்டட வரைஞர்) தரம் III | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி), விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் உயர் கணிதம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் | 1. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) அல்லது<br>2. தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளிக்கும் அதிகார சபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா |

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில் (தொழிநுட்ப) தகைமைகள் |
|---|---|---|---|
| | | தொழில்நுட்பம், பொறியியல் தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | அல்லது<br>3. கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறி யியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>4. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்-தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>5. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொ-றியியலாளர் பரீட்சையில் முதலாம் பகுதியினை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>6. தொழில் துறையுடன் தொடர் புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகைமை-களைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>7. கல்வி உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிநுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவ-னங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழிநுட்ப தகைமை களுக்கு எல்லா வகையிலும் சமனா-னது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமை களைப் பெற்றிருத்தல் |
| 2.1.2. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல்/ கட்டட வரைஞர்) பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி), விஞ்ஞா-னம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயன வியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பொறியியல் தொழில் நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | |

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில் (தொழிநுட்ப) தகைமைகள் |
|---|---|---|---|
| | | ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) பெற்றிருத்தல். (உ+ம் : தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் சிவில்/மின்னியல்/ இயந்திரவியல்) அல்லது<br><br>2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் கட்டட வரைபுக் கலைத் தொடர்பான ஒரு வருட முழுநேரப் பாடநெறியினை சிறப்பாக பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் கைத்தொழில் தொழிநுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் பாடநெறி யொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் (NCIT) பெற்றிருத்தல். அல்லது<br><br>4. கல்வி உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிநுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப் பிட்ட தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |

| *பதவி* | *க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்* | *க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்* | *தொழில் (தொழிநுட்ப) தகைமைகள்* |
|---|---|---|---|
| 2.1.3. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் / கட்டட வரைஞர்) பயிலுநர் தரம் (இரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி), விஞ்ஞா-னம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்-திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயன வியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பொறியியல் தொழில் நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந்-திருத்தல் | பொருத்தமற்றது |

***2.2 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு***

*(மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்களது நிரந்தர நியமனக்கடிதத்தின் சான்றுப்படுத் தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்)*

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | *தொழில் (தொழிநுட்பத்) தகைமைகள்* | *அனுபவம்* |
|---|---|---|---|
| 2.2.1. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் / கட்டட வரைஞர்) தரம் III | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி), விஞ்ஞா-னம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்க-ளில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந் திருத்தல். | மேலே அட்டவணை 2.1 இல் பிரிவு 2.1.1. இல் குறிப்பிட்டுள்ள தொழில் (தொழிநுட்ப) தகை-மைகளைப் கொண்டிருத்தல்<br><br>*ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற் குறிப்பிட்ட தகைமைகளுக்கு பதிலாக அரச நிருவாக சுற்றறிக்கை 46/90 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகள் பொருந்தும். | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 05 வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல் |

| பதவி | கல்வித் தகைமைகள் | தொழில் (தொழிநுட்பத்) தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|
| 2.2.2. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/ மின்னியல்/கட்டட வரைஞர்) பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி), விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல். | மேலே அட்டவணை 2.1 இல் பிரிவு 2.1.2. இல் குறிப்பிடுள்ள தொழில் (தொழிநுட்ப) தகைமைகளுடன் உரிய துறையில் குறைந்தது 05 வருட அனுபவம் பெற்றிருத்தல் | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 10 வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல் |
| 2.2.3. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் / கட்டட வரைஞர்) பயிலுநர் தரம் (இரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி), விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல். | பொருத்தமற்றது | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 10 வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல் |

**3. சம்பள அளவுத்திட்டம் :**

3.1 பொது நிருவாக சுற்று நிரூபம் 03/2016 இன் MN3-2006 சம்பளத் தொகுப்பிற்கமைய மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழிநுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III இற்கான மாதாந்தம் சம்பள அளவுத்திட்டம்.

ரூ. 31,040 - 10 X445- 11 X 660- 10 X 730- 10 X 750- 57,550/- ஆகும் (MN3-2006 சம்பளத் தொகுதி)

* பயிலுநர் தரத்திற்கான கொடுப்பனவு: - ஒரு வருடம் : ரூ. 27,140.00
இரு வருடம் : ரூ. 27,440.00

(பொ.நி.சுற்று நிரூபம் 03/2016 இன் உப அட்டவணை V-18 இற்கமைய 2020.01.01. ஆம் திகதி முதல்)

**4.ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-**

- மத்திய மாகாண தொழிநுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் இதற்குப் பொருந்தும் ;
- நிலவும் வெற்றிடங்களின் 70% ஆனவை திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் மிகுதி 30% மட்டுப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படையில் நிரப்பப்படும்.
- வெற்றிட எண்ணிக்கை 03 இனை விடக் குறைவாக இருக்குமிடத்து திறந்த ஆட்சேர்ப்பின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

- திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஒதுக்கப்படுள்ள வெற்றிடங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் 2.1.1. இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களே முதலில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பின்னர் இவ்வெண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் மாத்திரம் பிரிவு 2.1.2. மற்றும் 2.1.3 இன் கீழ் பயிலுநர் தரத்திற்கு விண்ணப்பதாரர்கள் உள்வாங்கப்படுவர்.

- மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த உள்ளக விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து மாத்திரம், மிகுதி வெற்றிட எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சையில் மூலம் தெரிவு செய்யப்படும் வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து நிரப்பப்படும்.

**5. ஆட்சேர்ப்பு முறை :-**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள். பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**6. சேவை நிபந்தனைகள் :-**

6.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

6.2 அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

6.3 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக்கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில்கொள்ளப்படமாட்டாது.

**7. விண்ணப்பிக்கும் முறை :-**

7.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும்.

7.2 மத்திய மாகாணத்தினுள் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் பின்வரும் நடைமுறையைக் கையாள வேண்டும்.

- இப் பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது.

7.3 மத்திய மாகாணத்திற்கு வெளியே நிரந்தர வதிவினைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் பின்வரும் நடைமுறையினைக் கையாள வேண்டும்.

- தமது பரீட்சைக் கட்டணத்தை நாட்டின் எப்பகுதியிலேனும் உள்ள மக்கள் வங்கிக் கிளையின் மூலமாக கண்டி மக்கள் வங்கியில் பேணப்படும் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இல. 003-1-001-0-000-6004 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவுவைத்து கிடைக்கப்பெறும் வைப்புச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும்.

- வங்கி வைப்புச் சீட்டினை நிரப்பும் போது கணக்குரிமையாளரின் பெயரிற்கு "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு" எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, தொலைப்பேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் காரணம் என்பதற்கு "மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2021/(சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2021" எனக் குறிப்பிட்டு வைப்புச்சீட்சை பூரணப்படுத்தி அனுப்புதல் கட்டாயமாகும்.

7.4 இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2021.05.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2021/(சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2021" எனக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் வதிவு மாவட்டத்தையும் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

**8. பரீட்சை ஊடகம்**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**9. பரீட்சை நிலையம்**

பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

**10. பரீட்சை செயற்றிட்டம் : -**

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் பின்வரும் பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

10.1. **நுண்ணறிவுப் பரீட்சை**: - (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்)
இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

10.2. **தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்** : - காலம் : 03 மணித்தியாலங்கள் (100 புள்ளிகள்)
துறை சார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்.

(அ) மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III/பயிலுநர் தரத்திலுள்ள பதவிகளுக்காக

இங்கு சிவில் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சம்பந்தமான வினாக்களைக் கொண்டது.

(ஆ) மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) தரம் III /பயிலுநர் தரத்திலுள்ள பதவிகளுக்காக

இயந்திரவியல் உத்தியோகத்தர் கொண்டிருக்க வேண்டிய அறிவினை மதிப்பிடும் வகையில் அமைந்துள்ள இக்கேள்விப்பத்திரத்திற்கு இயந்திரவியல் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே விடையளித்தல் வேண்டும்.

(இ) மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) தரம் III/ பயிலுநர் தரத்திலுள்ள பதவிகளுக்காக

மின்னியல் சம்பந்தமான பரீட்சார்த்தியின் அறிவினை மதிப்பிடும் கேள்விப்பத்திரமாகும். மின்னியல் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே இப்பகுதிக்கு விடையளித்தல் வேண்டும்.

(ஆ) மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டட வரைஞர்) தரம் III

கட்டட வரைஞர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அறிவினை மதிப்பிடும் கேள்விப்பத்திரமாகும். கட்டட வரைஞர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரமே இப்பகுதிக்கு விடையளித்தல் வேண்டும்.

**11. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :-**

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1 - 4 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும் போது கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இடவேண்டும்.

11.1 பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மாவட்டத்தின் குறியீட்டு இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கண்டி | - | 01 |
| மாத்தளை | - | 02 |
| நுவரெலியா | - | 03 |

11.2 மத்திய மாகாண இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் ஒவ்வொரு பதவிகளுக்கு ஒதுக்கியுள்ள குறியீட்டு எண்கள்

| | | | |
|---|---|---|---|
| தரம் III/பயிலுநர் தரம் | சிவில் | : | 01- C |
| | இயந்திரவியல் | : | 01 - M |
| | மின்னியல் | : | 01 - E |
| | கட்டட வரைஞர் | : | 01 - D |

11.3 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

11.4 நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

11.5 தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**12. அபேட்சகரின் ஆளடையாளம்**

பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்
(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு

இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குறியதாகும்.

இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

 டீ. ஏ. டி. டப்ளியூ. தயானந்த,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2021, மாச்சு 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில்**
**(சிவில்/இயந்திரவியல்/மின்னியல்/கட்டட வரைஞர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**
**(திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட) - 2021**

**Open/Limited Competitive Examination for Recruitment to Post of Technical Service (Civil/ Mechanical/Electrical /Draftsman) in Central Provincial Public Service – 2021**

பரீட்சை இலக்கம் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ (சிங்களம் -2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

பதவி ☐ பதவிக்குரிய குறியீட்டு இல. :- ☐

பரீட்சைக்கு தோற்றும் அடிப்படை
(திறந்த - 1 /மட்டுப்படுத்தப்பட்ட - 2) ☐

வதிவிட மாவட்டம் ☐

பரீட்சைக்குத் தோற்றும் மாவட்டத்தின் குறியீட்டு இல :- ☐

| | |
|---|---|
| கண்டி | - 01 |
| மாத்தளை | - 02 |
| நுவரெலியா | - 03 |

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்: உதா: SILVA, A.B.C.D)

1.2.முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................
திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்)

1.3. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ............................................

.......................................................................................................................................

1.4. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ........................................................

.......................................................................................................................................

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..................................................................................

.......................................................................................................................................

2.2 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்): .......................................................

.......................................................................................................................................

2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...............................................

.......................................................................................................................................

2.4 தற்போது அரசாங்க சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி: ..........................................................

.......................................................................................................................................

2.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.6 பால் (ஆண் -0, பெண்- 1) : | |

03. 3.1 பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2021.05.03) வயது :

வருடங்கள் : .............. மாதங்கள் : .............. நாட்கள் : ..............

3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

நிரந்தர தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

04. சமூகநிலை : திருமணமாகாதவர்- 1, திருமணமானவர் -2 | | ( உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

05. விண்ணப்பதாரரின் வதிவிட மாவட்டம் : ..............................

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் : -

6.1. க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :

பரீட்சை ஆண்டு : - ........................

சுட்டிலக்கம் : - ........................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :

பரீட்சை ஆண்டு: - ........................

சுட்டிலக்கம்: - ........................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

07. தொழில்சார் தகைமைகள்

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள் | கற்கைநெறி செல்லுபடியாகும் திகதி | NVQ மட்டம் | NVQ சான்றிதழ் திகதி | NVQ சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

08. விண்ணப்பதாரரினால் வகித்த பதவிகள் தொடர்பான விபரங்கள் (தேவையெனின்)

| திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் | வகித்த பதவி | காலம் | | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| | | | | |

09. பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/- செலுத்துதல் தொடர்பான விபரம் :
   i. பணம் செலுத்திய பிரதேச செயலகம்/மக்கள் வங்கிக் கிளை : .............................
   ii. திகதி : ..........................................................
   iii. பற்றுச்சீட்டின் இலக்கம் : ..........................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை/வைப்புச் சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின்/வைப்புச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்) |

10. நீங்கள் எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
   ........................................

   ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும் ..........................................................................................

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

.............................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ...........................

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி .....................................................என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

.............................................
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்

திகதி : ...........................

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ......................................................

பதவி : ......................................................

முகவரி : ...........................
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*13.அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி எனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்*

*இவ்விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி. ......................................................என்பவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான பரீட்சை அறிவித்தலின் ஏற்புகளுக்கமைய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதுடன் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ...................................................... என்ற பதவியில் நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார் எனவும் கடந்த ..........................வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை எனவும் உரிய துறையில் ..........................வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றுள்ளார் எனவும் தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.*

.....................................................
*திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்*
*(உத்தியோகப்பூர்வ முத்திரை)*

*திகதி : ...........................*

*04 - 353*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| I ஆவது பகுதி : | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 01.04.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.03.2021 |
| | | வெள்ளி | 09.04.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.03.2021 |
| | | வெள்ளி | 16.04.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 01.04.2021 |
| | | வெள்ளி | 23.04.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.04.2021 |
| | | வெள்ளி | 30.04.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.04.2021 |
| **மே** | .. | வெள்ளி | 07.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.04.2021 |
| | | வியாழன் | 13.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.04.2021 |
| | | வெள்ளி | 21.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.05.2021 |
| | | வெள்ளி | 28.05.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.05.2021 |
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2021 |
| | | வெள்ளி | 11.06.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.05.2021 |
| | | வெள்ளி | 18.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2021 |
| | | வெள்ளி | 25.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.